# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2016 பெப்ரவரி மாதம் 09 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

- **I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்
- **II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்
- **III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்
- **IV.** மனுக்கள்
- **V.** கேள்விகள்

**01.** **கௌரவ நிரோஷன் பாதுக்க உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(Îæ/vi (1)15/77)**

அ. மேல் மாகாணத்தின் கூட்டுறவு அமைச்சினால் 2011 ஆம் ஆண்டில் ரூபா ஐம்பத்தெட்டு இலட்சம் (ரூ. 5,800,000) செலவு செய்து பொரலஸ்கமுவ எகொடவத்த பிரதேசத்தில் கூட்டுறவு கட்டடம் ஒன்று 04 வருடங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்டு உள்ளதா ?

ஆ. அந் நிர்மாணத்தை இடை நடுவில் நிறுத்தக் காரணம் என்ன ?

இ. இக் கட்டட நிர்மாணத்தினைப் பூர்த்தி செய்ய தேவையான மிகுதி நிதி எவ்வளவு ?

ஈ. அந்த மிகுதி நிதியை எப்போது பெற்றுக் கொடுப்பீர்கள் ?

உ. கூட்டுறவு பிரதேச கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க மேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு உரிய காணி ஒன்றிலேயே இவ்வாறாக நிதி செலவு செய்யப்பட்டு உள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஊ. இவ்வாறு நகர பிரதேசமொன்றில் கூட்டுறவு கடை ஒன்றினை ஸ்தாபிப்பதன் மூலம் சிறப்பான பலாபலன் ஒன்றினைப் பெற்றுக் கொள்ள இயலும் என்பதனை நீங்கள் நம்புகின்றீர்களா ?

**02.** **கௌரவ லலித் வர்ணகுமார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.01.19 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி:**
**(Îæ/vi (1)16/02)**

அ. ஹொரண கல்வி வலயத்தின் புலத்சிங்கள வட்டாரத்தில் பகல நாரகல சிறி சாராணந்த ஆரம்ப வித்தியாலயம் என்ற பெயர் கொண்ட பாடசாலை ஒன்று காணப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இப் பாடசாலையில் 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. 2016 ஆம் ஆண்டின் பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஈ. 2015 ஆம் ஆண்டில் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?
- i. அதில் சித்தி பெற்ற எண்ணிக்கை எவ்வளவு ?
- ii. அதிகபட்ச புள்ளிகள் எத்தனை ?
- iii. ஆகக் குறைந்த புள்ளிகள் எத்தனை ?

உ. அப்படியாயின் புலமைப் பரிசில் புள்ளி சதவீதத்திற்கு இணங்க பாடசாலையானது முழு இலங்கையிலும் எத்தனையாம் இடத்தில் இருக்கின்றது ?
- i. மேல் மாகாணத்திற்கு உரிய இடம் எத்தனை ?
- ii. களுத்துறை மாவட்டத்திற்கு உரிய இடம் என்ன ?
- iii. ஹொரண வலையத்திற்கு உரிய இடம் என்ன ?

ஊ. சதவீத அடிப்படையில் உயர் தரத்தில் காணப்படுவதாக காட்டிய போதிலும் அப் பாடசாலை எந்த இடம் ஒன்றிலும் அல்லது தாபனத்திலும் பாராட்டுக்கு உட்படாததற்கு உரிய காரணம் என்ன ?

எ. பிரதேசத்தின் பிரபல்யமான பாடசாலை ஒன்றாக மாறியுள்ள இப் பாடசாலைக்குத் தேவையான கட்டட வசதிகள் தொடர்பாக நீங்கள் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் ?

**03.** **கௌரவ கித்சிறி கஹடபிடிய உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு:**

**(Îæ/vi (1)16/03)**

அ. மேல் மாகாணத்தில் கல்வி வலையக் காரியாலயங்கள் எத்தனை காணப்படுகின்றன ?

ஆ. அக் கல்வி வலையங்களுக்காக 2016 ஆம் ஆண்டிற்கு கண்காணிப்பு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா ?

இ. அவ்வாறு நியமிக்கப்பட்டிருந்தால் அந்தந்த வலையத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர் பட்டியலை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

ஈ. வலையக் காரியாலயங்களுக்கு கண்காணிப்பு உறுப்பினர்கள் எதன் அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர் ?

உ. அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு உறுப்பினர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களும் கடமைகளும் யாவை ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. பொது நடவடிக்கை

**01.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர்** (மே.மா)

*"மேல் மாகாணத்தின் 2015 இன் ............. ஆம் இலக்க நிதி (திருத்த) நியதிச் சட்டம் "*

[இரண்டாம் முறை வாசித்தல்]

{நியதிச் சட்ட நகல் பிரதியின் முதலாம் முறை வாசிப்பு 2015.07.21 ஆந் திகதி நடைபெற்றது}

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01.** **கௌரவ மஹேஷ் அல்மேதா அவர்கள்**

மேல் மாகாணத்தில் தோட்டம் உள்ளடங்கலாக பெருமளவு மக்கள் வசிப்பதுடன் அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தைச் சிறந்ததாகவும், அவர்கள் இந் நாட்டின் பொருளாதாரத்தின் பலமிக்க பங்குதாரர்களாக மாற்றும் நோக்கிலும் பெருமளவு தோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு கல்வியினை ஒழுங்கான முறையில் பெற்றுக் கொடுக்க பல வசதிகள் ஏற்படுத்தப்பட்ட போதும், அவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பல பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்த ஆசிரியர்களுக்கு காணப்படும் பிரச்சினைகளில் பாடசாலைக்கு செல்வதில் காணப்படும் போக்குவரத்துப் பிரச்சினை முக்கியமானதாக காணப்படுவதுடன் அதற்குத் தீர்வு ஒன்றாக மேல் மாகாணத்தினுள் கடமையாற்றும் எல்லாத் தோட்டப் பாடசாலைகளிலும் உள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக மேல்மாகாண மாகாண சபையின் மத்தியஸ்ததில் மோட்டார் சைக்கிள் ஒன்றினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பது சிறந்தது என இந்த சபை கருதுகின்றது. **(பி/vi (1)14/14)**

**02.** **கௌரவ ரோஸ் பிரணாந்து அவர்கள்**

பல்வேறுபட்ட பெயர், பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், அறிமுகப் படுத்தி படிப்படியாக கிராமத்தை அண்டிய பாடசாலைகள் மூடப்படுவதன் ஊடாக கிராமத்தில் குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களில் தோன்றும் திறமையான பிள்ளைகளுக்கு ஒழுங்கான பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் உரிமை இல்லாமல் போகின்றது கிராமத்தை அண்டிய பாடசாலைகள் மூடப்படுவதனால் வாகனங்களின் மூலம் தொலைவில் உள்ள பாடசாலைகளுக்கு செல்ல முடியாத பிள்ளைகள் பாடசாலைக் கல்வியில் இருந்து விடைபெறும் எண்ணிக்கை அதிகரிப்பதைக் காணமுடிகின்றது இதன் காரணமாக பெற்றோர்களும் பல கஷ்டங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் எனவே கிராமத்தை அண்டிய பாடசாலைகளுக்காக மீண்டும் வசதிகளை வழங்கி கிராமத்தில் உள்ள பிள்ளைகளின் கல்வி உரிமையினைப் பாதுகாக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi (1)15/01)**

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2016.01.20 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.